திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, 'துப்பாக்கியிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்று மாவோ கட்சியினர் ஒரு போஸ்டர் ஒட்டுகிருர்கள். நாம் பரிபூரண ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே அதை மனதில் கொண்டாவது கவனித்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. அப்படி ஒட்டியவர்கள் சிக்குவார்களானால் அவர்களைத் தண்டிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : 'மாவோவின் சிந்தனைகள்' என்ற புத்தகத்துக்கு மத்திய அரசு தடை உத்தரவு விதித்திருக்கிருர்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விவரம் இல்லை.

Representation of the Merchants Association of Chinnamanur.

* 19 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Merchants Association from Chinnamanur of Madurai district has submitted a Memorandum entitled " the real position of middle class merchants in Tamil Nadu " in February—March 1968; and

(*b*) the action taken thereon?

சின்னமானூர் வணிகர்கள் சங்க முறையீடு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட சின்னமானூர் வணிகர்கள் சங்கம் 1968 பிப்ரவரி, மார்ச்சில், தமிழகத்தில் நடுத்தர வணிகர்களின் உண்மை நிலை என்று ஒரு Memorandum சமர்ப்பித்ததா ?

(இ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே. வணிகர்களின் நிலை பற்றி ஒரு புத்தகம் அழகாக அச்சிட்டு அமைச்சர்களுக்கு அனுப்பியிருப்பதாகவும் அதன் காப்பியை எனக்கு அனுப்பியிருப்பதாகவும் கூறி அனுப்பியிருக்கிருர்கள். அதை ஒருக்கால் புத்தகம் என்று நினைக்காமல் படிக்காமல் விட்டுவிட்டார்களோ என்று நினைக்கிறேன். அதைத் தேடிப் பார்த்துப் படித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தப் புத்தகம் வந்ததாகத் தகவல் இல்லை. ஆனால் கேள்வியில் கேட்டிருக்கிற சின்னமானூர் வணிகர்கள் கழகம் சம்பந்தமாக வருவாய்த் துறை

22nd February 1969]

வாரியம், மதுரை மண்டலத்தைச் சேர்ந்த கமர்ஷியல் டாக்ஸ் டெபுடி கமிஷனரை விசாரித்ததில், சின்னமானூரில் வணிகர்கள் கழகமே இல்லை என்ற தகவல்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சர்க்கரை வியாபாரிகள் 18, 19 பேர்கள் சேர்ந்த சங்கம்தான் இருந்தது. அந்த சங்கம் கூட 1968 மார்ச் மாதத்திற்கு மேல் செயல்படவில்லை என்று மட்டும் தகவல் கிடைத்திருக்கிறது.

Government Godown at Tiruvarur.

* 20 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether it was found out that there was a deficiency of 35,000 kalams of paddy in the stock held in the Government Godown at Tiruvarur of Thanjavur district during 1967–68;

(b) if so, the reasons therefor; and

(c) whether it is a fact that 25 thousand bags of paddy were spoilt as a result of storing the harvested paddy without having it dried?

திருவாரூரிலுள்ள அரசாங்க கிடங்கு

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-68-ல் தஞ்சாவூர் மாவட்ட திருவாரூரிலுள்ள அரசாங்க கிடங்கில் நெல் இருப்பு வைத்திருந்ததில் 35 ஆயிரம் கலம் குறைந்ததா?

(ஆ) ஆமெனில், அதற்குரிய காரணங்கள் யாவை?

(இ) பச்சை நெல்லை காய வைக்காமல் கிடங்கில் கொட்டி வைத்ததில் 25 ஆயிரம் மூட்டை நெல் கெட்டுப் போனதா?

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி: (அ) இல்லை திருவாரூரில் அரசாங்கக் கிடங்கு ஏதும் இல்லை.

(இ) & (உ) இவ்வினாக்கள் எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அது அரசாங்கக் கிடங்காக இல்லாவிட்டாலும் கூட, கூட்டுறவு இலாகாவும் அரசாங்கத்தின் அங்கம்தான். அப்படி கூட்டுறவு இலாகா கிடங்கு இருக்கிறதா? மத்திய அரசாங்க உணவு இலாகா கிடங்கு இருக்கிறதா? எனக்குக் கிடைத்த தகவலின்படி பச்சை நெல்லைக் காயவைக்காமல் அடக்கிவைத்ததால் 25,000 மூட்டை நெல் கெட்டு விட்டதாகத் தெரிகிறது. அது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததா, கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்ததா அல்லது மாநில அரசாங்கத்தைச் சேர்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. கோவிந்தசாமி: தஞ்சாவூர் கோவாபரேட்டிவ் மார்கெட்டிங் பெடரேஷன் திருவாரூர் கிளையில் நவீன